


சென்னை வடக்கு மாவட்டத்தை சேர்ந்த வழக்கறிஞர் எல்.முருகவேல் மகன் திலீபன் முருகவேல் – எஸ். மதுமிதா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வின் போது மாண்பமை நீதியரசர் தண்டபாணி, மூத்த வழக்கறிஞர் ஜி.தேவராஜன் சட்டத்துறை துணை செயலாளர் வழக்கறிஞர் என் மருது கணேஷ், வழக்கறிஞர்கள் மா.ரூபசங்கர், டி.சீனிவாசன், ஷாஜகான், எம்.கஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் எல்.செல்வமணி உடனிருந்து மணமக்களை வாழ்த்தினர்.

### தி.மு.க. தலைமையிலான

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி அமோக வெற்றி பெறும்!

## மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் பேட்டி!



விருதுநகர், மே 4-

வர்த்தக சிலிண்டர் விலையேற்றம் ஓட்டல் தொழில் முடங்கி பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்கும் அபாயம் உள்ளது என்று சண்முகம் வேதனை தெரிவித்து உள்ளார்.

மே தினத்தை முன்னிட்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் விருதுநகர் மாவட்ட கட்சி அலுவலகத்தில் நேற்று செங்கொடி ஏற்றி வைத்தார். பின்னர் அவர், செய்தியாளர்களிடம் கூறிய தாவது:

அமெரிக்காவும், இஸ்ரேலும் ஈரான் மீது தொடுத்த யுத்தத்தினால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக காஸ் விலை மிக கடுமையாக உயர்ந்துள்ளது. பிப்ரவரி 28ம் தேதி யுத்தம் தொடங்கியபோது வெறும் 70 டாலராக இருந்த ஒரு பேரல் கச்சா எண்ணெய் விலை, தற்போது 126 டாலராக உயர்ந்துள்ளது. இதன் விளைவாக வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் எரிவாயு சிலிண்டர் விலை ரூ.3,250 ஆக உயர்ந்துள்ளது.

இதனால் ஓட்டல் தொழில்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. வீடுகளுக்கு வழங்கப்படும் சிலிண்டர்களிலும் தட்டுப்பாடு ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது. 5 மாநில சட்டமன்றத் தேர்தல் முடிந்த நிலையில் அடுத்த சில நாட்களில் பெட்ரோலிய பொருட்களின் விலையை ஒன்றிய பாஜ அரசு கடுமையாக உயர்த்த இருக்கிறது. இவ்வளவு நாளும் உயர்த்தாமல் இருந்தது தேர்தலை கணக்கில் கொண்டுதான்.

கச்சா எண்ணெய் விலை மிகவும் குறைவாக இருந்த காலத்தில் பெட்ரோலிய பொருட்களின் விலையை குறைக்காமல், தனது நண்பர்களை கொள்ளையடிக்க வைத்த பாஜ அரசு, இன்றைக்கு சர்வதேச நெருக்கடியால் ஏற்படும் சுமை முழுவதையும் மக்கள் தலையில் சுமத்துவது கண்டிக்கத்தக்கது. இவ்வாறு தெரிவித்தார்.

**'பெரும்பான்மையுடன் திமுக ஆட்சி அமைக்கும்'**

'தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகள் என்பது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தவும் கட்சியினர் மத்தியில் சலசலப்பை உண்டாக்கவும் வெளியிடப்படும் கருத்து திணிப்பே ஆகும். விஜய் ஆட்சி அமைப்பார் என்று ஒரு கருத்துக்கணிப்பு வந்திருக்கிறது. இதை யாரும் ஏற்றுக் கொள்வார்களா? அவரே கூட இதை ஏற்றுக்கொள்ள மாட்டார். நிச்சயமாக திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அறுதி பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கும்" என்று சண்முகம் தெரிவித்தார்.

### புதுச்சேரி

# மாநில தொ.மு.ச. சார்பில் மே தின விழா! தொழிலாளர்களுக்கு நல உதவிகள்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தலைமையில் வழங்கல்!



புதுச்சேரி, மே 4-

மே-1 தொழிலாளர் தினத்தையொட்டி, புதுச்சேரி மாநில தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில், தந்தை பெரியார் போக்குவரத்து கழக பணிமனை, பி.ஆர்.டி.சி. பணிமனை, திருவள்ளுவர் பேருந்து நிலையம், சுதேசி பஞ்சாலை, மாஸ் ஹோட்டல், பழைய சட்டக் கல்லூரி, கதிர்காமம், வில்லியனூர், மூலகுளம், ஜே.கே. பெட்ரோல் பங்க், பாண்லே, புதிய பேருந்து நிலையம், போட் ஹவுஸ் உள்ளிட்ட இடங்களில் உள்ள ஆட்டோ மற்றும் டெம்போ, டாக்சி நலச்சங்கம், மேட்டுப்பாளையம் தேவி பாட்டில் தொழிற்சாலை, எம்.ஆர்.எப்., எல்&டி, பெர்கர் பெயிண்ட், மின் துறை உள்ளிட்ட மாநிலத்தில் உள்ள 37 இடங்களில் தொ.மு.ச. கொடி ஏற்றுதல் மற்றும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது.

தொ.மு.ச. பேரவைத் தலைவர் அண்ணா அடைக்கலம் தலைமை தாங்கினார். தொ.மு.ச. நிர்வாகிகள் அங்காளன், சிவக்குமார், மிஷேல், காயாரோகணம், துரை, சீனுவாசன், ராஜேந்திரன், திருக்குமரன், விஜயபாஸ்கர், கண்ணன், ரவி, கொளஞ்சியப்பன், ராஜசேகர், ஆட்டோ தொழிற்சங்க நிர்வாகிகள் அஜிபாஷா, முருகன், பாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில், புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளரும், தொ.மு.ச. கௌரவத் தலைவருமான இரா. சிவா, எம்.எல்.ஏ. கலந்து கொண்டு, தொ.மு.ச. கொடியேற்றி வைத்து தொழிலாளர்களுக்கு இனிப்பு வழங்கினார். தொடர்ந்து ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிகளில் மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் லோகையன், அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ். கோபால், வே. கார்த்திகேயன், பா.செ.சக்திவேல், நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், செ. நடராஜன், வடிவேல், து. சக்திவேல், ராஜா (எ) தியாகராஜன், கலியகார்த்திகேயன், ராதாகிருஷ்ணன், தொ.மு.ச. நிர்வாகிகள் ராஜாராமன், தட்சிணாமூர்த்தி, அசோக் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### இன்று (4ம் தேதி) காரைக்குடியில்

# சிவகங்கை மாவட்டத்திற்கான நான்கு தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை!

## 8 மணிக்கு துவக்கம்!

சிவகங்கை, மே 4-

கடந்த ஏப்ரல் 23ஆம் தேதி தமிழகசட்டமன்றத் தேர்தலுக்கான வாக்கு பதிவு நடைபெற்றது . இதில் சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை, திருப்பத்தூர், காரைக்குடி, மானாமதுரை தனிஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு நடைபெற்று முடி வடைந்தது. மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் காரைக்குடியில் உள்ள அழகப்பா பொறியியல் கல்லூரி வளாகத்தில் மூன்று அடுக்கு போலீஸ் பாதுகாப்புடன் பாதுகாப்பான அறையில் வைக்கப்பட்டுள்ளது. இன்று 4ம்தேதி திங்கள் கிழமை நான்கு தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை துவங்குகிறது.

முதலில் காலை 8 மணிக்கு தபால் வாக்குகளும் அதனைத் தொடர்ந்து காலை 8.30மணிக்கு நான்கு தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கைகளும் தொடங்குகிறது. ஒரு சட்டமன்ற தொகுதிக்கு 14,மேஜைகள் வீதம் 56மேஜைகள் உட்பட மொத்தம் 76 மேஜைகளில் வாக்குகள் எண்ணப்படுகிறது. காரைக்குடியில் 28 சுற்றும், திருப்பத்தூரில் 27 சுற்றும், சிவகங்கையில் 29 சுற்றும் ,மானாமதுரையில்27சுற்று வாக்குகள் என்னப்பட உள்ளது.

இதில் சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 5வது முறையாக அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், காரைக்குடியில் காங்கிரஸ் வேட்பாளர் எஸ்.மாங்குடி, மானாமதுரையில் இரண்டாவது முறையாக திருமதி தமிழரசி ரவிக்குமார் சிவகங்கை தொகுதியில் நடிகர் கருணாஸ் ஆகியோர் போட்டியிடுகிறார்கள்.

வாக்குகள் எண்ணப்படும் இடமான காரைக்குடி அழகப்பா பொறியியல் கல்லூரி அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் கல்லூரி வளாகத்தைச் சுற்றி மூன்றடுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



கள்ளக்குறிச்சி மாவட்ட திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற பெரியாரியல் பயிற்சி பட்டறை கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் திராவிட மாடல் ஆட்சி இன்றைக்கு உலகம் போற்றக்கூடிய அளவிற்கு வளர்ந்து இருக்கிறது, ஆகவே தமிழ்நாட்டு மக்களின் பேராதரவுடன் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைக்கும் என்று சிறப்புரை ஆற்றினார், இதில் மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர திராவிடர் கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் 16 தொகுதி வேட்பாளர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை முகவர்களின் பயிற்சி வகுப்பு கூட்டம் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது. கு.பிச்சாண்டி, எம்.எஸ். தரணிவேந்தன், வசந்தம் கார்த்திகேயன், த.உதயசூரியன், சி.என். அண்ணாதுரை, க.தேவராஜ், கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் உடன் உள்ளனர்.

### மே 4ம் தேதி வெற்றிச்செய்தி வரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் முதல்வராக வருவார்!

## பிரேமலதா பேட்டி!



சென்னை, மே 4-

மே 4ம் தேதி வெற்றிச் செய்தி வரும். மு.க. ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராக வருவார் என்று பிரேமலதா கூறினார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் உலக உழைப்பாளர்கள் தினமான மே தினம் கொண்டாடப்பட்டது. தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா, விஜயகாந்த் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியதுடன், கொடியேற்றி தொழிலாளர்களுக்கு இனிப்பு வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

தொடர்ந்து பிரேமலதா அளித்த பேட்டி:

கருத்துக்கணிப்பை நான் எப்படி பார்க்கிறேன் என்றால் ஆக்கப்பொறுத்தவர்கள் ஆறப்பொறுங்கள். எல்லாம் முடிந்து இருக்கிறது. இன்னும் 2 நாள்தான் இருக்கு. மே 4ம் தேதி வெற்றிச் செய்தி வரும். எல்லோருக்கும் நல்லதே நடக்கும். எங்கள் மதச்சார்பற்ற வெற்றிக் கூட்டணி அமோக வெற்றி பெறும். அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் முதல்வராக வருவார்.

நாங்கள் (தேமுதிக) 10 பேர் போட்டியிட்டுள்ளோம். கேப்டன் ஆசீர்வாதத்துடன் 10 பேரும் சட்டசபைக்கு செல்வோம். எல்லோரும் வாழ்த்தினாலும் தே.மு.தி.க. தான், திட்டினாலும் தே.மு.தி.க. தான். பழுத்தமரம் தான் கல்லடிபடும் என்ற விமர்சனங்களுக்கு மே 4ம் தேதி பதில் கொடுக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

### தென்றல் செல்வராஜ் தலைமை! மணிமாறன் தென்றல் வரவேற்புரை!

# பொள்ளாச்சியில் பாரம்தூக்கும் தொ.மு.ச. சார்பில் மே தின விழா!

## திப்பம்பட்டி ஆறுசாமி - எம்.அமுதபாரதி-மு.க.முத்து-எஸ்.கௌதமன்-முன்னணியினர் பங்கேற்பு!



பொள்ளாச்சி, மே 4-

பொள்ளாச்சியில் திருவள்ளூர் திடலில் திமுக பாரம் தூக்கும் தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கத்தின் 45ஆம் ஆண்டு கொடியேற்று விழா நிகழ்ச்சி மற்றும் மே தின விழா கழக சட்டத்திட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ் தலைமையில் பொள்ளாச்சி தெற்கு நகர பொறுப்பாளர் எம்.அமுதபாரதி, தலைமை செயற்குழு உறுப்பினர் மு.க.முத்து, நகர மன்ற துணைத் தலைவர் எஸ்.கௌதமன் ஆகியோர் முன்னிலையில் கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணிமாறன் தென்றல் வரவேற்புரையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு தூய்மை நல வாரிய தலைவர் திப்பம்பட்டி வே.ஆறுச்சாமி, கலந்து கொண்டு நிகழ்ச்சியை துவக்கி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார்

பொள்ளாச்சி வடக்கு மத்திய ஒன்றிய செயலாளர் அய்யம்பாளையம் பா.ராசு தொழிற்சங்க கொடி ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார்

நிகழ்ச்சியில் நகரத் துணைச் செயலாளர் நாச்சிமுத்து , நகர மன்ற உறுப்பினர்கள் பி.ஏ.செந்தில்குமார், சு.தங்கவேல், தொழிற்சங்க தலைவர் சிராஜுதீன் , மாவட்ட பிரதிநிதி இருப்பு சுப்பிரமணியம், வட்டக் கழக செயலாளர்கள் போஜராஜன், ஜெயச்சந்திரன், நாகேந்திரன், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் எம்.வி ஜெயக்குமார், முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கே.வி.ஆறுமுகம், மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் சதீஷ், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் செல்வி,முன்னாள் கோவை தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தனம் தங்கதுரை, முன்னாள் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஆட்டோ ராமு,

பொள்ளாச்சி தெற்கு நகர இளைஞரணி அமைப்பாளர் முத்துக்குமார், நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஈஸ்வரன், பாலமுருகன் பாண்டித்துரை அபூபக்கர் சித்திக், பூபதி, நகர தகவல் தொழில்நுட்ப அணி விக்னேஷ் பிரபு, நகர வர்த்தக அணி ராஜ்பிரபு, மீனவரணி பல்லடம் ரோடு தினேஷ், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கருமாபுரம் சுரேஷ் , நகர கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் மகேந்திரன், நகர தொண்டரணி துணை அமைப்பாளர் தாஸ் பிரபு, வட்ட பிரதிநிதி ரஞ்சித், முன்னாள் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பைக் பாபு, சந்திர போஸ் , முன்னாள் நகர மாணவர் அணி துணை அமைப்பாளர் கௌதம் , சிடிசி ஹரி ராஜா, ஹரி பிரகாஷ், முகேஷ் பாண்டியன், சதீஷ், சுதீஷ், ஹரி, புகைப்படக் கலைஞர்கள் ஆலயம் நாகராஜ், பாபு ராஜா, தொழிற்சங்க தோழர்கள் மணி செல்வம், கருப்புசாமி, கோபாலகிருஷ்ணன், வெள்ளிங்கிரி, மணியன், ஐயப்பன், பழனிச்சாமி, கே.ஆறுச்சாமி , புலி முருகன், வி.ஏ.செல்வன், பி. வேல்முருகன் , பி.ரமேஷ் குமார், எஸ்.மருதப்பன், எஸ்.செல்வம், மாரியப்பன், கிட்டான், மாரிமுத்து மற்றும் பலர் கலந்து கொண்டனர்.